26 மே 2019

# Newbec

NEW WAY OF BEING CHURCH

உயிர்ப்பின் 6ம் ஞாயிறு

திருமுழுக்கு அளித்து அனுப்புதல்

மாதாந்திர கருப்பொருள்:

**நீதியும் உண்மையும் மனிதனை விடுவிக்கிறது**

## திரு அவை

## தூய ஆவி - யூதர்களும் பிற இனத்தாரும்

இன்றைய முதல் வாசகம் திருத்தூதர் பணிகள் நூலில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. தொடக்க கால திருச்சபையின் குழப்பங்களை நாம் காண்கிறோம்.



பவுலடிகளாரின் காலத்தில் யூதர்கள் மற்றும் பிறவினத்தாரிடையே அதிகமான வேறுபாடுகள் காணப்பட்டன. தொடக்ககால கிறிஸ்துவர்கள் யூதர்களாய் இருந்தனர், உயிர்த்தெழுந்த இயேசு ஆண்டவரை அவர்கள் விசுவசித்தபோதும் தொடர்ந்து யூதர்களாகவே இருக்க விரும்பினார்கள். தொடக்க கால யூத கிறிஸ்துவர்கள், பிற இனத்தார் கிறிஸ்துவர்களாக மாறும்போது மோசே சட்டத்தின்படி விருத்த சேதனம் செய்து கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். (திருபணி: 15:5)

**இயேசுவின் குரலை அறிந்துகொள்ள செய்பவர் தூய ஆவியானவரே.**

- திருத்தந்தை பிரான்சிஸ்

பவுல் அடிகளார் கிறிஸ்து இயேசுவில் யூதர் என்றும் பிற இனத்தார் என்றும், அடிமை என்றும் உரிமைக்குடிமகன் என்றும், ஆண் என்றும் பெண் என்றும் வேற்றுமை இல்லை என்று கூறுகிறார். தொடக்க கால திருச்சபை இதைப் பற்றி விவாதித்து, மூப்பர்கள் யெருசலேமில் பேதுருவோடும் பிற அப்போஸ்தலர்களோடும் ஒன்றுகூடி முடிவெடுத்தனர். இந்தக் கூட்டம் யெருசலேம் சங்கம் என்று அழைக்கப்பட்டது. இது கிறிஸ்துவர்கள் கூட்டிய திரு அவையின் மிக முக்கியமான சங்கம். அந்தியோக்குவில் இருந்து பவுலும், பர்னபாவும் இந்தச் சங்கத்தில் கலந்துகொள்ள யெருசலேம் நகர் வந்தனர்.

திருத்தூதர் பணிகள் அதிகாரம் 15:28 இல் குறிப்பிட்டுள்ளது போல யெருசலேம் சங்கத்தில் ஒன்று கூடி மிக முக்கியமான முடிவுகளை எடுத்தனர். " இன்றியமையாதவற்றைத் தவிர அதிகமான வேறு எந்தச் சுமையையும் உங்கள் மேல் சுமத்தக் கூடாது என்று தூய ஆவியாரும் நாங்களும் தீர்மானித்தோம்"

திரு அவைக்கு வழி காட்டுவதும், நடத்துவதும் தூய ஆவியார் தான், என்பதை யெருசலேம் சங்கத்தினர் ஏற்றுக்கொண்டனர். பிற இனத்தவரும் திருஅவையில் இணைவதை எளிமைப்படுத்தச் சங்கம் முடிவெடுத்தது. யார் வெற்றி பெறுகிறார்கள் என்பது அல்ல; தூய ஆவியார் எதை விரும்புகிறார் என்பதே மிக முக்கியம்.

இந்த முடிவால் நாம் அனைவரும் இன்று கிறிஸ்துவர்களாக இருக்கிறோம். சங்கம் அன்று வேறுவிதமாக முடிவெடுத்திருந்தால், அனைத்து யூத கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்; சடங்குகளையும் யூதச்சட்டங்களையும் பின்பற்றவேண்டும் என்று இருந்திருக்கும். இன்னும் யூத மதத்தின் ஒரு பிரிவாக மட்டுமே கிறிஸ்துவம் இருந்திருக்கும். பாலஸ்தீனத்தை விட்டு வெளியே வந்திருக்காது.

யூதர்கள் இருந்த கூட்டத்தில் யெருசலேம் சங்கம் எடுத்த முடிவால், பிற இனத்தவராகிய நான் இன்று கிறிஸ்துவனாக மாற முடிந்தது. உலகின் கடையெல்லை வரை உள்ள அனைவருக்கும் நற்செய்தியை அறிவித்து அவர்களை சீடராக்க வேண்டுமென்பதே திரு அவையின் நோக்கம்.

திருவெளிபாட்டு நூலில் சொல்லப்பட்டது (திருவெ: 21:22) போல நகரில் கோவில் காணப்படவில்லை. எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரே அதன் கோவில். கடவுளின் மாட்சியே அதன் ஒளி. ✝

### இன்றைய வாசகங்கள்:

தி.பணி 15, 1-2. 22-29

திபா 66, 2-3. 5. 6 & 8

வெளிபாடு 21, 10-14. 22-23

யோவான் 14, 23-29

### வாரம் ஒரு வசனம்

கிறிஸ்துவில் யூதனென்றும் கிரேக்கனென்றும் இல்லை.

INTERNAL CIRCULATION ONLY
BUL 21/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

-




**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

# ***திருமுழுக்கு அளித்து அனுப்புதல்***

*2019 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*

*வித்தியாசமாக இருப்பதற்கான துணிச்சல்*

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பாஸ்கா காலம் 6ஆம் ஞாயிறு (3ஆம் ஆண்டு) சனி 25-05-2019 - ஞாயிறு 02-06-2019**

தி.ப : 15: 1-2, 22-29 தி.பா: 67 : 1-2, 4, 5, 7 தி. வெ: 21: 10-14, 22-23 யோவான் : 14: 23-29

**“ கடவுளே ! மக்களினத்தார் எல்லோரும் உம்மைப் போற்றிப் புகழ்வார்களாக !” - திபா 67**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி 20 | 25 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (புனித லொறன்சோன் ருய்ஸ்) | |
| ஞாயிறு | 26 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித டைடஸ்)<br>திருப்பலி (ஆ) (புனித பௌஸினா)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ. மொ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 27 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 29 | **பங்கு திருவிழா முப்பெரும் நாள் கொண்டாட்டம் மாலை 7.00 மணி : செபமாலை, நவநாள்.திருப்பலி - தெய்வீக வளர்ச்சி** | | |
| வியா | 30 | ஆண்டவரின் விண்ணேற்றம். நேரம்: காலை 6.45 & மாலை 7.00 அனைத்து மொழி (கடன் திரு நாள் ) | | |
| வெள் | 31 | **மாலை 7.00 : செபமாலை, நவநாள். திருப்பலி - செயலில் புனிதம்** திருவிழா திருப்பலி & மற்றும் விருந்துபசரிப்பு | | |

**பாஸ்கா காலம் 7ஆம் ஞாயிறு (3ஆம் ஆண்டு)**

தி.ப : 7: 55-60 தி.பா: 96 : 1, 2, 6, 7, 9 தி. வெ: 22: 12-14, 16-17 20 யோவான் : 17: 20-26

**“ உன்னதராம் ஆண்டவர் ஆட்சி செய்கின்றார் .” - திபா 96**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 01 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/<br>திருப்பலி (புனித லொறன்சோன் ருய்ஸ்) | |
| ஞாயிறு | 02 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித டைடஸ்)<br>திருப்பலி (ஆ) (புனித டேவிட்)<br>திருப்பலி (சீ)<br>திருப்பலி (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## *2019 மே (வைகாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) பங்கு காணிக்கை:
18/19 மே 2019 ரிம: 10,464.60

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**ii)எஸ்.பி.எம் விவிலியப் பாடம்**: வகுப்புகள் சனி- பகல் 2.30 மணி - படிவம் 3 & 4 மாணவர்களும் இதில் கலந்துகொண்டு எஸ்.பி.எம் தேர்வில் இதை ஒரு பாடமாக எடுக்குமாறு ஊக்குவிக்கிறோம். தொடர்புக்கு: ஹெலன் போல் ( 012- 616 2811) பேட்ரிக் ராஜ் ( 016 - 661 4073)

**திருமண அருளடையாள கொண்டாட்டம்**
1) ப்ரெட்ரிக் பிரான்சிச் & ப்ரியலக்ஷ்மி 08-06-2019 காலை 11.00
2) பரமன் & சுமதி 08-06-2019 பகல் 3.30

***மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்***
மைக்கல் ஜேம்ஸ் அலெக்சாண்டர் (இறப்பு: 17-05-2019)
***முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக***

**v) ஆலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருப்போம்:** சுவரில் ஆணி அடித்தல், பசை சுவரொட்டி ஒட்டுதல் ஆகியவற்றுக்கு அனுமதியில்லை. கழிவறைகளையும் ஆலய சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருப்பது நமது கடமை. தூய்மையே புனிதம் இறைவன் வாழும் இல்லத்தை எப்போதும் பாதுகாப்போம்.

**vi) திவ்விய நற்கருணை:** நற்கருணை ஆண்டவரை பெற்றுகொள்ள செப உணர்வோடு வருவோம் “ஆமென்” என்று தெளிவாகவும் சத்தமாகவும் கூறுவோம் நற்கருணையை நாவில் / கரங்களில் பெற்றுக் கொண்டவுடன் அதே இடத்தில் அதை உட்க்கொள்ளவும் இருக்கைக்கு நற்கருணையைக் கொண்டு செல்ல வேண்டாம்

**vii) பங்கு பல்சமய மற்றும் சமயங்களுக்கிடையிலான உரையாடல்** பணிக்குழுவில் உறுப்பினராக இணைந்து கொள்ள ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும். கிறிஸ்டோபார் ( 019-6216 194)
ஏன் சுமித்ரா ( 012- 910 5119)

இன்று திருப்பலியை வழி நடத்திய புனித தீத்து அதிச வினருக்கு நம்முடைய நன்றிகள் உரித்தாகுக

➢ **பங்கு திருவிழா முப்பெரும் நாள் கொண்டாட்டம் ( மே 29-31) புதன் - வெள்ளி**
**கருப்பொருள்: திருமுழுக்கு அளித்து அனுப்புதல்:**

**29-05(புதன்) மாலை 7.00 மணி : செபமாலை, நவநாள்.திருப்பலி - தெய்வீக வளர்ச்சி**
**30-05 (வியாழன்) மாலை 7.00: (நான்குமொழி) செபமாலை, நவநாள், திருப்பலி தூதுரைப்பதற்கு உருமாற்றம்**
(ஆண்டவரின் வின்னேற்ற விழாவை முன்னிட்டு காலையிலும் திருப்பலி நடைபெறும். நேரம்: காலை 6.45) (கடன் திரு நாள் திருப்பலி)

**31-05-2019 (வெள்ளி) மாலை 7.00 : செபமாலை, நவநாள். திருப்பலி - செயலில் புனிதம்**
திருவிழா திருப்பலி & மற்றும் விருந்துபசரிப்பு: ( அன்னையின் திரு உருவ தேர்ச்சுற்று ஆலய வளாகத்தில் நடைபெறும். உங்களுடைய மெழுகுத்திரிகளை உடன் கொண்டு வாருங்கள்)

➢ **தவக்கால உறைகளை த**யவு செய்து 26-05-2019 க்குள் ஒப்படைக்கவும். பங்கு அலுவலகம் அல்லது காணிக்கைப் பைகளில் போடவும்.

➢ **குருத்துவ அருளடையாள அருட்பொழிவு:** டீக்கன் ஜோசப் கோமஸ் - 06-06-2019 காலை 10.30 இறை இரக்கத்தில் ஆலயம், ஷா ஆலம்.

➢ **பெந்தகோஸ்தே திருவிழிப்பு:** ஜூன் 8-2019 ( இரவு 8-12 வரை) அருங்கொடைக் குழுவினர்

➢ **இளைஞர்களோடு இந்த வழிபாட்டை வழி நடத்துவர். அனைவரையும் வரவேற்கிறோம்.(ஆங்கிலம் - ஆலயத்தில் - தமிழ் - மண்டபம், சீனம் - விவிலிய அறை)**

➢ **உறுதிப்பூசுதல் அருளடையாளம் - சனி - 13-07-2019 மாலை 6.00 மணி**

- உறுதிப்பூசுதல் முகாம்: மே 24-26 எஸ்.டி.எம். சிரம்பான்
- இயற்கையை நேசிப்போம் - கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டம் - 28/5 போர்ட்டிக்சன் கடற்கரை
- குருவானவரோடு உரையாடல்: ஜூன் 14/15 , 2019

➢ **நெகிரி மாநில இளைஞர் பேரணி** ( ஜூன் 28-30 NUBE) போர்ட்டிக்சன்) ஒவ்வொரு இளைஞரும் ஒரு இளைஞரைக் கொண்டு வாருங்கள். தொடர்புக்கு: சப்ரீனா - 013- 288 7624 - இன்றே பதிந்து கொள்ளுங்கள்

➢ நம்முடைய ஆலய மண்டபம், உணவு விடுதி, விசிடேஷன் பார்லர், ஜலான் லீ சாம் மண்டபம் ஆகியவை வாடகைக்கு விடப்படுகின்றன. உங்களுடைய தேவைக்குபங்கு அலுவலகத்தை நாடவும்.

➢ படிவம் 3/எஸ்.பி.எம்.தேர்வுகளில் சிறந்த தேர்ச்சி பெற்ற 5 பேருக்கும் நம்முடைய வாழ்த்துகள். அதிச / சோன் மற்றும் பங்கில் உங்களுடைய ஈடுபாட்டுக்கு வாழ்த்துகள். இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

➢ இயற்கையை நேசிப்போம் - இந்தப் போட்டியில் வரைதல், கதை சொலுதல், மற்றும் வெட்டி ஒட்டும் கொலாஜ் ஆகியவற்றில் பங்கு பெற்ற அனைவருக்கும் வாழ்த்துகள். ஜூன் மாதத்தில் வெற்றியாளர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். உங்களுடைய பங்கெடுப்புக்கு நமது நன்றிகள்.

➢ வருகின்ற 27 -05-2019 மாலை 7.30 மணிக்கு 100 வார விவிலிய சகோதர சகோதரிகள் ஒரு தேநீர் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளார்கள். இதில் ஏற்கெனவே பயின்ற மாணவர்கள் வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். 100 வார விவிலியத்தில் ஆர்வமுள்ளவர்களை உடன் அழைத்து வாருங்கள். உங்கள் வருகையை பொறுப்பாளரிடம் தெரியப்படுத்தவும். தொடர்புக்கு : ரீத்தா சேவியர் : 012 918 1620, அன்னமேரி : 0 14 222 4924

- அருட்தந்தை ஜோர்ஜ் அவர்கள் பல்சமய உரையாடல் நிகழ்வுக்காக(ஜெர்மனி-வத்திக்கான்) கல்வி சுற்றுலா சென்றுள்ளார். மலேசியாவில் கிறிஸ்துவ அடித்தளம் - மே 24- ஜூன் 5 வரை
- **30/5 - 02/06/2019** - கமத்தான் விழாவைக் கொண்டாடும் கிழக்கு மலேசிய சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய கமாத்தான் நல் வாழ்த்துகள்